இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 88 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 21 – சனிக்கிழமை 07 நவம்பர் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:85 - Issue 88 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 21- Saturday 07 November 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

கொள்கைகள் என்பது மேடைகளில் பேசுவதற்கு மட்டுமல்ல; வாழ்ந்து காட்டுவதற்கும் என்பதை உணர்த்தும்

இலட்சக்கணக்கான 'காசி'களைக் கொண்டது தி.மு.க.!

வாடிப்பட்டி ஒன்றியக் கழக மூத்த முன்னோடியுடன் சந்திப்பு குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உணர்ச்சிமிகு பெருமிதம்!

சென்னை, நவ. 7-

"கொள்கைகள் என்பது மேடைகளில் பேசுவதற்கு மட்டுமல்ல; வாழ்ந்து காட்டுவதற்கும் என்பதை உணர்த்தும் இலட்சக்கணக்கான காசிகளைக் கொண்டது தி.மு.கழகம்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஒன்றியக் கழக மூத்த முன்னோடியுடனான சந்திப்பு குறித்து உணர்ச்சியுடன் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஒன்றியம் தென்கரை கிளையைச் சேர்ந்தவர் கே.காசி. கடந்த 1966ஆம் ஆண்டு தென்கரை கிளை தொடங்கப்பட்டது முதல் கிளைக் கழகச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். மிசா சிறைவாசம் தொடங்கி, தி.மு.க. சார்பில் நடைபெற்ற போராட்டங்களில் பங்கேற்று சிறைக்கு சென்றுள்ளார். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்திக்க வேண்டும் என்று அவர் வைத்த கோரிக்கை சமூக வலைதளங்களில் வைரலானது. இதையடுத்து, தி.மு.க. மூத்த நிர்வாகி காசியை தனது ஆழ்வார்பேட்டை இல்லத்திற்கு நேரில் அழைத்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடி புத்தகங்களைப் பரிசாக வழங்கி சிறப்பித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திமுக மூத்த முன்னோடி காசி., தி.மு.க. தலைவரை, சந்தித்தது, மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாக கூறினார். தி.மு.க. மீண்டும் ஆட்சியமைக்கும் என்றும் அவர் உறுதிபட கூறினார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:–

வெறும் கொடியேந்தி நிற்பவர்களல்ல; கொள்கையேந்தி வாழ்பவர்கள்தான் தி.மு.க.வினர்! அதற்கு எடுத்துக்காட்டாகத் திகழும் மதிப்பிற்குரிய காசி அவர்களைச் சந்தித்தேன்.

முரசொலியை தனது அரசியல் பாடசாலையாக்கியவர்!

தந்தை பெரியாரின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டு, முரசொலியைத் தனது அரசியல் பாடசாலையாக்கி, சாதி மறுப்புத் திருமணத்தை மனமுவந்து வரவேற்று, பெருமிதத்துடன் கொண்டாடிய அவரது கண்களில் கலைஞரின் சிரிப்பைக் கண்டேன்!

கொள்கைகள் என்பவை மேடைகளில் பேசுவதற்கு மட்டுமல்ல; வாழ்ந்து காட்டுவதற்கும் என்பதை உணர்த்தும் இலட்சக்கணக்கான காசிகளைக் கொண்டது திராவிட முன்னேற்றக் கழகம்!

கற்றுக்கொள்ள ஏராளம் இருக்கிறது!

உழைப்பாலும் தியாகத்தாலும் கழகத்தை வளர்த்தெடுத்த இத்தகைய தொண்டர்களின் வாழ்விலிருந்து, கழகத் தலைவரான நான் உட்பட, தலைமை முதல் கடைக்கோடித் தொண்டர் வரை, மூத்த முன்னோடிகள் முதல் புதிதாகக் களம் காணும் இளைஞர்கள் வரை, அனைவரும் கற்றுக்கொள்ள ஏராளம் இருக்கிறது!

அன்புநிறை காசி அவர்களை வழியனுப்பிய பின்னும், அவருடனான உரையாடல் உள்ளத்தில் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.









விவசாயிகளின் பயிர்க் கடனை

சோப்ளாங்கி அரசு எப்போது தள்ளுபடி செய்யப் போகிறது?

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

சென்னை, நவ.7-

"விவசாயிகளின் பயிர்க் கடனை சோப்ளாங்கி அரசு எப் போது தள்ளுபடி செய்யப் போகி றது?" என்று சட்டமன்ற எதிர்க்கட் சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பி யுள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டி ருப்பதாவது:-

விவசாயிகளுக்கான பயிர்க் கடன் தள்ளுபடி எப்போது அறி விக்கப் போகிறார் Dummy CM?

முழுப்பயிர்க்கடன் தள்ளுபடி செய்வோம் என்று வாக்குறுதி கொடுத்தவர்கள், ஆட்சிக்கு வந்த பிறகு, விவசாயிகளை Slab வாரியாக பிரித்து சொற்ப அளவிலான தொகையை மட் டுமே தள்ளுபடி செய்வதாக அறி வித்தார்கள்.

அதனை தி.மு.கழகம் உள் ளிட்ட எதிர்க்கட்சிகளும், விவ சாய சங்கங்களும் கடுமையாக



எதிர்த்தன.

மாங்குனி அமைச்சர்கள் கூறியது என்ன?

இந்த சூழலில் விவசாயிகள் போராட்டம் நடத்திய போது, தாராபுரம், மதுராந்தகம் இடைத் தேர்தல் முடிந்து பேச்சுவார்த் தைக்கு அழைப்போம் என்று மாங்குனி அமைச்சர்கள் கூறி னார்கள்.

இடைத்தேர்தல் முடிந்து ஒரு மாதம் ஆகப்போகிறது. இன்ன மும் விவசாயிகளுக்கான பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக இந்த சோப் ளாங்கி அரசு வாய்த்திறக் காமல் இருப்பது ஏன்?

விவசாயிகள் வேதனை!

இந்த அரசின் மவுனத் தைப் பார்க்கும் போது, மறுபடியும் சொற்ப தொகையை மட்டும் தள் ளுபடி என்று அறிவிக்க முயற்சி நடப்பது போல் தெரிகிறது என்று விவசா யிகள் கவலை தெரிவிக்கின்ற னர்.

பண்டிகையைக் கூட கொண் டாட முடியாமல் சோகத்தில் இருக்கும் விவசாயிகள் அடுத்து வரும் பொங்கல் திருநாளை யாவது நிம்மதியாக கொண்டாட முடியுமா என்ற வேதனையில் இருக்கிறார்கள்.

காவிரியில் முறையாக தண் ணீரை திறக்காமல் விவசாயி களை வஞ்சித்ததால் குறுவை பொய்த்தது.

அப்போது, வறட்சி நிவார ணம் வழங்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் நாம் பேசிய போது, 'ஏற்கனவே கொடுத்து விட்டோம்' என்று குறுவை சிறப் புத் தொகுப்பை வறட்சி நிவார ணம் என Confidentஆக பொய் சொன்ன முதலமைச்சர், இப் போது என்ன சொல்லப் போகி றார்?

இந்த முறையும் விவசாயி களை ஏமாற்றாமல், கழக ஆட் சிக்காலங்களில் போல, அனைத்து விவசாயிகளுக்கு மான அனைத்துப் பயிர்க்கட னையும் இந்த Circus அரசு ரத்து செய்ய வேண்டுமென கேட் டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டா லின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

'தூயசக்தி' விஜய் ஆட்சியில்

இலவச சைக்கிள் டெண்டரிலும் மெகா ஊழல்!

சைக்கிள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கூடுதல் விலை ஏன்?

சென்னை, நவ.7-

பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்குவதற்கு த.வெ.க. அரசு வெளியிட்ட டெண்டரில் மிகப்பெரிய ஊழல் நடந்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

புதுச்சேரி அரசு மாணவர்களுக் கான விலையில்லா சைக்கிள் குறைந்த விலையில் கொள்முதல் செய்ய டெண்டர்விட்டது. குறைந்த விலை கொடுக்க முன்னணி சைக் கிள் நிறுவனம் டெண்டர் கோரியுள் ளது. வெறும் எட்டாயிரத்து 861 சைக்கிள் வாங்கும் புதுச்சேரி அர சுக்கே ஒரு சைக்கிள் 6,248 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. ஆனால், 5.32 லட்சம் சைக்கிள் களை தமிழ்நாடு அரசு வாங்க உள் ளது.

புதுச்சேரியை விட 60 மடங்கு அதிக எண்ணிக்கையில் சைக்கிள் வாங்கும் தமிழ்நாட்டுக்கு அதைவிட குறைந்த விலைக்கு கிடைக்க வேண்டும். மாறாக ஒரு சைக்கிள் 7,235 முதல் 7,476 ரூபாய்க்கு சம் பந்தப்பட்ட நிறுவனம் டெண்டர் எடுத்துள்ளது. புதுச்சேரியை விட தமிழ்நாட்டில் ஒரு சைக்கிளுக்கு ஆயிரம் ரூபாய் வரைக்கும் எதுக்கு அதிக விலை கேட்கப்படுகிறது.

இதுகுறித்து அமைச்சர் நிர்மல்குமார் தெளிவாக பதில்கூற ஏன் மறுக்கிறார்? என்று சமூக செயற்பாட்டார்கள் கேள்வி எழுப்பி யுள்ளனர்.

அமேசானில் ஹீரோ சைக்கிள் 5 ஆயிரத்து 907 ரூபாய்க்கு விற்கப்ப டும் நிலையில், வெளிச்சந்தையில் 7 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமாக விலை கொடுத்த விஜய் அரசு வாங்குகிறது. இலவச சைக்கிள் டெண்ட ரில் மெகா ஊழல் நடைபெற்றிருப்ப தாக பரபரப்பு குற்றம் சாட்டப்பட்டுள்ளது.